## நடப்பு நிகழ்வுகள் - மார்ச் 01, 2017

**1. மகாராஷ்டிராவின் புதிய தலைமை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார் ?**

A. சுமித் முல்லிக்
B. கஷிஷ் நந்தன்
C. நிர்மல் குப்தா
D. ஸ்வதீன் ஷத்திரியா

**விடை: A. சுமித் முல்லிக்**

1982 தொகுதி ஐஏஎஸ் அதிகாரி சுமித் முல்லிக், மகாராஷ்டிராவின் புதிய தலைமை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஸ்வதீன் ஷத்திரியா, ஜனவரி 31 ஆம் தேதி ஓய்வு பெற வேண்டியிருந்தது, ஆனால் அவருக்கு மாத நீட்டிப்பு வழங்கப்பட்டது, அவரின் இடத்தை சுமித் முல்லிக் நிரப்புகிறார். இப்பதவிக்கு முன்பு, பொது நிர்வாகத் துறையில் தலைமை நெறிமுறை அதிகாரியாக இவர் பணியாற்றி வந்தார். முன்னதாக, அமராவதி கோட்ட ஆணையாளராகவும், பள்ளி கல்வி செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். மேலும் இவரே ஆளுநருக்கு செயலாளராவார்.

**2. சமீபத்தில் மறைந்த தரக் மேத்தா(Tarak Mehta), எந்த மொழியின் குறிப்பிட்டத்தக்க நாடக எழுத்தாளர் ?**

A. உருது
B. குஜராத்தி
C. மராத்தி
D. ஒடியா

**விடை: B. குஜராத்தி**

பிரபல குஜராத்தி எழுத்தாளர் மற்றும் குறிப்பிடத்தக்க நாடக எழுத்தாளர் தரக் மேத்தா, சமீபத்தில் குஜராத்திலுள்ள அகமதாபாத்தில் காலமானார். பிரபல நகைச்சுவை கலைஞரான இவர், மும்பையை சேர்ந்த குஜராத்தி வார இதழான "சித்ரலேகா"-வில் வரும் “Duniya Ne Undha Chasma” பகுதியின் மூலம் நன்கு அறியப்படுகிறார். இவர் 2015 ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது பெற்றார். 1971 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சித்ரலேகா வார இதழில் இவரது முதல் வாராந்திர பகுதி இடம்பெற்றது. பல்வேறு இன்றியமையாத பிரச்சினைகள் குறித்து சுமார் 80 புத்தகங்களை இவர் எழுதியுள்ளார். பிரபலமான நகைச்சுவை தொலைக்காட்சி தொடரான ‘Taarak Mehta Ka Ooltah Chashmah’, பத்மஸ்ரீ தரக் மேத்தாவின் ‘Duniya Ne Undha Chasma’ பகுதியின் தொலைக்காட்சித் தழுவலாகும்.

**3. “The Wrong Turn: Love and Betrayal in the Time of Netaji” என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார் ?**

A. ஆலாப் ராய்
B. ஆதிஸ்ரீ ராய்
C. சுஜாதா போஸ்
D. நமீதா ராய் கோஷ்

**விடை:D. நமீதா ராய் கோஷ்**

நமீதா ராய் கோஷ் மற்றும் சஞ்சய் சோப்ரா ஆகிய இருவரும் “The Wrong Turn: Love and Betrayal in the Time of Netaji” என்ற புத்தகத்தை எழுதியுள்ளனர். இது சுதந்திரப் போராட்டத்திற்கு எதிராக அமைக்கப்பட்ட பேரார்வத்தின் ஒரு பெரும் கதையாகும்.

**4. 2017 சர்வதேச அரிய நோய் தினத்தின் (IRDD- International Rare Disease Day) மையக்கரு என்ன ?**

A. Solidarity

B. Mystery Diagnosis
C. Research
D. Rehabilitation

**விடை: C. Research**

அரிய நோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த மற்றும் அரிய நோயுள்ள தனிநபர் மற்றும் அவர்களின் குடும்பங்களின் மருத்துவ பிரதிநிதித்துவம் மற்றும் சிகிச்சை அணுகலை மேம்படுத்த ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் கடைசி நாளில் சர்வதேச அரிய நோய் தினம் (IRDD) அனுசரிக்கப்படுகிறது. 2017 IRDD தினமானது, ஆராய்ச்சியில் நோயாளிகளின் முக்கிய பங்கை அங்கீகரிக்கும் வகையில் "Research" என்ற மையக்கருவுடன், 'With research, possibilities are limitless' என்ற வாசகத்துடனும் நடைபெற்றது.

**5. 2017 ESPN cricinfo விருதுகளில், "Captain of the Year" என பெயரிடப்பட்டுள்ளவர் யார் ?**

A. விராத் கோஹ்லி
B. பென் ஸ்டோக்ஸ்
C. பேப் டுப்ளிசிஸ்
D. ஸ்டீவன் ஸ்மித்

**விடை: A. விராத் கோஹ்லி**

ESPNcricinfo-வின் 10வது ஆண்டு விருதுகள் விழாவில், இந்திய டெஸ்ட் அணியின் கேப்டன் விராத் கோஹ்லி 'Captain of the Year' என பெயர் சூட்டப்பட்டுள்ளார். விராட் தலைமையிலான இந்திய அணி கடந்த ஆண்டில் 12 டெஸ்ட் போட்டிகளில் 9-ல் வெற்றி பெற்றது. இது தவிர, கேப் டவுனில் நடைபெற்ற தென் ஆப்ரிக்காவிற்கு எதிரான போட்டியில் 198 பந்துகளில் 258 ரன்கள் விளாசியதற்காக இங்கிலாந்து வீரர் பென்

ஸ்டோக்ஸ்-ற்கு 'Test Batting Performance of the Year' விருது வழங்கப்பட்டுள்ளது.

**6. அல்வின் பிரான்சிஸ் (Alwin Francis), எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர் ?**

A. கிரிக்கெட்
B. பூப்பந்து
C. டென்னிஸ்
D. செஸ்

**விடை: B. பூப்பந்து**

சிறந்த இந்திய பாட்மிண்டன் இரட்டையர்களான தருண் கோனா மற்றும் அல்வின் பிரான்சிஸ், சமீபத்தில் கம்பாலாவில் நடைபெற்ற 2017 உகாண்டா சர்வதேச பேட்மிண்டன் போட்டியின் இறுதி ஆட்டத்தில் மொரிஷியஷின் ஆதிஷ் லூபா மற்றும் ஜோர்ஜ் ஜூலியன் பாலை 21-8, 21-14 என்ற புள்ளிகளில் தோற்கடித்து ஆண்கள் இரட்டையர் பட்டத்தை வென்றுள்ளனர்.

**7. சமீபத்தில் மறைந்த ஹாஜி அப்துல் சலாம், எந்த மாநிலத்தை சேர்ந்த நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் ?**

A. உத்தரப் பிரதேசம்
B. மணிப்பூர்
C. ஆந்திரப் பிரதேசம்
D. மத்தியப் பிரதேசம்

**விடை: B. மணிப்பூர்**

மூத்த காங்கிரஸ் தலைவர் ஹாஜி அப்துல் சலாம் (69), சமீபத்தில் மணிப்பூர் மாநிலத்தின் இம்பாலில் காலமானார். மாநிலங்களவை

உறுப்பினராக இருக்கும் முதல் மணிப்புரி முஸ்லீம் இவரே. இவர் 2014-2020 வரை இரண்டாவது முறையாக இந்திய பாராளுமன்ற மேல்சபையில் மணிப்பூர் மாநிலத்தை வழிநடத்துகிறார்.

**8. உலக வங்கி (WB), தேஜஸ்வினி திட்டத்திற்கு எவ்வளவு கடன் தொகைக்கு ஒப்புதல் அளித்துள்ளது ?**

A. $ 55 மில்லியன்
B. $ 78 மில்லியன்
C. $ 63 மில்லியன்
D. $ 89 மில்லியன்

**விடை: C. $ 63 மில்லியன்**

ஜார்க்கண்ட்டில் 'Tejaswini: Socio-Economic Empowerment of Adolescent Girls and Young Women' திட்டத்தின் கீழ், சுமார் 6.8 லட்சம் வளரிளம் பெண்களுக்கு அதிகாரமளிக்க, உலக வங்கியானது (WB) $ 63 மில்லியன் கடன்தொகையை இந்தியாவுக்கு வழங்கும்.இதற்காக, சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் (ஐடிஏ) $ 63 மில்லியன் கடன்தொகைக்கான ஒரு நிதி ஒப்பந்தத்தை சமீபத்தில் உலக வங்கி, இந்திய அரசுடன் செய்துள்ளது. தேஜஸ்வினி திட்டம் ஜார்க்கண்ட் மாநிலத்தின் 17 மாவட்டங்களில் வழங்கப்படும். இது மூன்று முக்கிய கூறுகளை கொண்டுள்ளது: சமூக, கல்வி மற்றும் பொருளாதார வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்; தீவிர சேவை விநியோகம்; மாநில திறன் வளர்த்தல் மற்றும் செயல்படுத்தல் ஆதரவு. திட்டத்தின் இறுதி தேதி ஜூன் 30, 2021 ஆகும்.

**9. சமீபத்தில் தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA), பிபிசி மீது 5 ஆண்டு தடை விதித்தது. தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் ( NTCA ) எந்த அமைச்சகத்தின் சட்டபூர்வமான அமைப்பு ?**

A. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்
B. நீர்வள, நதி அபிவிருத்தி மற்றும் கங்கா புத்துணர்வு அமைச்சகம்
C. வெளிவிவகார அமைச்சகம்
D. சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம்

**விடை: D. சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம்**

அசாமின் காசிரங்கா தேசிய பூங்காவில் வேட்டையாடுவது குறித்து உண்மைக்கு புறம்பான கருத்துகளை ஆவணப்படத்தில் கூறியிருப்பதாக, பிரித்தானிய ஒளிபரப்பு கார்ப்பரேஷன்(British Broadcasting Corporation) மற்றும் அதன் பத்திரிகையாளர்களுக்கு இந்தியாவில் உள்ள அனைத்து புலிகள் சரணாலயங்களிலும் படப்பிடிப்பு நடத்த 5 ஆண்டுகளுக்கு தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் தடைவிதித்துள்ளது. BBC செய்தியாளர் ஜஸ்டின் ரவுலட் மூலம் எடுக்கப்பட்ட "Killing for Conservation" ஆவணப்படம், காசிரங்காவின் காண்டாமிருக பாதுகாப்பு பற்றி பேசுகிறது; வேட்டையாடுபவர்களை "சுட்டுக் கொல்லும்" அதிகாரம் வனக்காவலர்களுக்கு உண்டு எனவும் இதில் கூறப்பட்டுள்ளது. பூங்காவிற்கு அருகில் வாழும் பழங்குடி மக்களின் வாழ்க்கையை பாதிக்கும் வனவிலங்கு பாதுகாப்பில் உள்ள வேட்டை-எதிர்ப்பு கொள்கைகளையும் ஆவணப்படம் விமர்சிக்கிறது. புலிகளின் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் 2006-ல் திருத்தப்பட்ட, வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம் 1972-யை செயல்படுத்த சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தின் (MoEFCC) கீழ் அமைக்கப்பட்ட ஒரு சட்டபூர்வமான அமைப்பே NTCA ஆகும்.

**10. எந்த நகரம், 4வது India-CLMV Business Conclave-2017-யை நடத்தியது ?**

A. புனே
B. சென்னை
C. ஜெய்ப்பூர்

D. புது தில்லி

**விடை: C. ஜெய்ப்பூர்**

இந்தியா-CLMV (Cambodia, Lao PDR, Myanmar and Vietnam) வர்த்தக கான்கிளேவின் 4-வது பதிப்பு, ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் நடைபெற்றது. வர்த்தகம் மற்றும் இந்திய தொழில்சாலை கூட்டமைப்பு ஏற்பாடு செய்த இந்த மாநாட்டை மத்திய வர்த்தக மற்றும் தொழில்சாலை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடங்கி வைத்தார். மாநாட்டின் நோக்கம் குறிப்பிட்ட திட்டத்தின் வாய்ப்புகளை அடையாளம் காணுதல் மற்றும் அப்பகுதியில் வணிக கூட்டை(business partnerships) தேட முற்படுவது. பார்மா, ஹெல்த்கேர், உற்பத்தி, வேளாண் வணிகம், உணவு பதப்படுத்துதல், கற்கள் மற்றும் நகைகள், ஜவுளி, தோல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் கல்வி போன்ற துறைகளில் இந்த மாநாடு கவனம் செலுத்துகிறது.